REGD. No. M. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 1. VOL. 1. | ஈசுவர ஹூ ஆவணிமீ SEPTEMBER 1937. | பகுதி 8. No. 8.

உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1. | மாறனடி மெய்ம்மை. | பத்திராசிரியர். | 107. |
| 2. | திருவாய்மொழி அநுபவம். | ஸ்ரீ உபவே ஏ. வி. கோபாலாசாரியார். | 112. |
| 3. | ஓர் பெரியார் பிரிவு. | பத்திராசிரியர். | 115. |
| 4. | பாரோர் பாக்கியப் பார்ப்பனச் சிட்டர். | ஸ்ரீ உபவே ப. ரே. திருமலை ஐயங்கார். | 116. |
| 5. | அடியேன் அநுபவித்த விண்ணப்பம். | திருவொற்றியூர் வி. ம. ம. ஷண்முகசுந்தரமுதலியார். | 119. |
| 6. | திருப்பாவைவிளக்கும் திருப்பாவலர். | யஸ். குமாரசாமி செட்டியார். | 120. |
| 7. | திவ்யப்ரபந்த நிபுணரான தில்லையம்பூர் ஸ்வாமி | இராயப்பேட்டை சுந்தர சேகரர். | 120. |
| 8. | பன்மணித்திரள். | பாரத்வாஜி. | 121. |
| 9 | ஹாஸ்யத்துணுக்குகள். | விநோதன். | 123. |


பத்திராசிரியர்:—
ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்

வருஷம் 1-க்கு ரூ ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணையும் நறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பலமுண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ::

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol 1. | ஈசுவர ௵ ஆவணி ௴ SEPTEMBER, 1937. | பகுதி 7 & 8 No. 7 & 8

## மாறனடி மெய்ம்மை.

சோதித்தருவேகிப் போகத்துற நாகத்
தோதப்படு வேதத்தோபத் தொடுபொடிப்
பேதப்படு வாதம் சாடித்திகழ்போதன்
பாதத்துறை சென்னிக்காதைச் சடகோபன்
காதத்துறை சந்தம் நாதத்துறை பந்தம்
பாதத்துறை கந்தம் நாமத்துறை யந்தம்
யாதும்குறையற்றே யாவும் குணமுற்றே
எதுத்திறனண்ணு வேதத்திறனம்மா. 1.

வானுகு வையத் தோரேனுகு மாயோன்
தேனுர் பதச் செவ்வி யானுகு மேனிக்
கோனுகுமாறேது மோவாது மாறன்
தானுகு மாறீது தானெண்ணினனே. 2.

ஆதியறவாழி நெறி மாறியது தேறி
மாதவர்கள் வாழவொரு மாறனென மாறி
யாதுமறியாதபடி யாதவனவன் தான்
வேதமெனவந்தணர்களோது தமிழ்தந்தான். 3.

தூதனுய்ச் சென்றவோர் தூயவன் கீதையாய்
ஊதியன்றேங்கு சிரோங்காரச்சங்கனே
நாதனுய்த்தன் திருத்தாணைம் வானெலித்
சோதனைச் செந்தமிழ்ப்போதனுயோதினன். 4.

திருநாரணன் தானே மாறன் சடகோபனெனத்தன் சேவடி செவ்வி திருக்காப்புப்பாடிக்கொண்டே திருவாய்மொழி என்றதற்கு அத்திருவாய்மொழிதானே சான்றுகும் நீர்மையை ஈண்டுச் சிறிதேகுறிக்கொள்வாம். அதன் பரப்பனைத்தையும் ஓதும் பெரியோர் வாய்மொழியளவையானே உணர்க.

துளவம் கமழும் கண்ணன் குழலோசையும், வகுளம் கமழும் ஆழ்வார் தமிழோசையும் ஒருபான்மைத்து என்றதை முன்னரே விளக்கிக்கொள்வோம். "உழலையென்பின் பேய்ச்சி முலையூடு அவளை உயிருண்டான் கழல் களவையே சரணாக்க் கொண்ட குருகூர்ச்சடகோபன் குழலின மலியச்சொன்ன ஓராயிரத்துள்" என்றும், "அன்று மாயன் குழல்விள்கின்ற பூந்தண்துழாய்விரை நாறவந்துஎன்னுயிரைகள்கின்றவாறு அறியீர்." என்றும், 'மாறன்' என்னும் க்ருஷ்ண த்ருஷ்ணாதத்வத்தை தமிழ் வேதம் ஓதியருளிய இந்நீர்மை கண்டார்க்கு, மாயனும் மாறனும், கீதையும் திருவாய்மொழியும், ஒருபொருண்மைத்து என்ற நுட்பம் தானே விளங்கும். இப்பொருளை தேசிகனார் யாதவாப்யுதயத்து, "வேணு : பபௌ வேத இவத்விதீய:" என்று குறிக்கொண்டார். இவ்வாற்றான் மாயனுக்கும், மாறனுக்குப், உற்ற ஓர் ஒற்றுமையை "சுடர்ச்சோதிமணி நிறமாய் முற்ற இம்மூவுலகும் விரிகின்றசுடர் முடிக்கே ஒற்றுமை கொண்டது" என்று தமிழ் வேதம் விளக்கிய வாறு. "ஆர்யபாதௌ இமௌ மமௌ" என்றவான்மீகிபகவான் திருவாக்கே, விரிந்து விளங்கும் திருவாய்மொழி என்னும் ஆயிர மாமணிக்கணங்கள் ஒன்றித்திகழ ஓர் தனிச்சூத்திரமாய் நின்றது. இவ்வாறு பதபாதுகங்கள் ஒன்றி விளங்குமோர் தாத்விகாத்வை தலித்தாந்தரஹஸ்யத்தை வெளியிடும் தமிழ் மறைப்பாசுரங்களுள் சில வற்றை ஈண்டைக்கு எடுத்துக்காட்டுவாம்:—

"என்னதாவிமேலையாய் ஏர்கொளேழுலகமும், துன்னி முற்றுமாகி நின்ற சோதிஞானமூர்த்தியாய், உன்ன தென்னதாவி யும் என்னதுன்னதாவியும், இன்னவண்ணமே நின்றாய் என்று ரைக்க வல்லேனே" என்றும் "என்னைத்தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசனை" என்றும் "என்னைத்தன்னாக்கி என்னால் தன்னைப்பார்பரவின்கவிபாடும் பரமரே" என்றும், யானாய்த்தன்னைத்தான் பாடி என்றும், "என்னைத்தன்னாக்கி என்னால் தன்னை சீர்பெற இன்கவி சொன்ன திறம்" என்றும், "என்னை உன்திருவடியே சுமந்து கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே" (இருதிருவடித்தத்துவமும் ஓர் சடகோபதத்துவம் என்றது கருத்து) என்றும், "தலைமேல் புனைந்தேன் சரணங்கள்...... நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேனே" என்றும், "தலைமேல

தாளிணைகள்...... என்னம்மான் நிலைபேறான்." (திருவடி நிலை என்றது குறிப்பு) என்றும், "பின்னை தன்கேள்வன்.........தாள் என் தலைமேல் புனைந்தேனே" என்றும், "அடிச்சிபோம் தலைமிசை நீ அணியாய் ஆழியங்கண்ணா! உன் கோலப்பாதம்" என்றும், (இனி தமது தனிச்சிறப்புக்கூறுமாறு) "தாள்களை எனக்கே தலைத் தலைச்சிறப்பத்தந்த பேருதவி" என்றும், "ஆழிப்பிரான் எனக்கே உளன்" என்றும், "என்னுள் கலந்தவன்.... தன்னுள் கலவாத தெப் பொருளும் தானில்லையே" ('அகஸ்த்யப்ராதா' என்னுமாபோலே நிரூபக மிருக்கிறபடி. 'நாராயணன்' 'வாஸுதேவன்' என்னுமா போலே 'என்னுள் கலந்தவன்' என்று காணுமவனுக்குத் திருநாமம்' என்ற நம்பிள்ளை ஈடுபாடு கண்டு ஸபாதுகபரப்ரஹ்மவ்யாப்தி தெளிக) என்றும், "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" (இவருக்கே தன்னைத்தந்ததால் தான்கற்பகமானவாறு என்றது கவிக்குறிப்பு) என்றும், "தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன் செழும் பறவை தானேறித்திரிவான தாளிணை யென் தலைமேலே" (ஓடும்புள்ளேறி உலகு காக்கும் பரன், பாதுகம் புனைந்தேதிரிவன் என்றதால் ஸபாதுகபரப்ரஹ்மவ்யாப்திக்கே பூர்த்தி ஓதியவாறு) என்றும், "அப்பொன் பெயரோன் தடநெஞ்சம் கீண்டபிரானார் தமதடிக் கீழ் விடப்போய்த்திடநெஞ்சமாய் எம்மை நீத்து இன்று தாறும் திரிகின்றதே" (பரன்திருவடி நிலையாய்ப் பொலியா நிற்கும் தாமே உலகுகாக்கத்திரிதரும் திறம் கூறியவாறு, குறிப்பு: நரங்கலந்த சிங்கமாகியவர்: றபரன் "விஷ்ணுத்வத்விகுணபரிணஹோத் கடதநு:" "வ்யாபிரூபமபி கோஷ்பதயித்வா பக்தவத்ஸலதயோச்சித வேலம்" என்று பட்டரும், 'மஹாவிஷ்ணு' என்று மந்திர மறையும் ஓதியருளியவாறு, தன்பரப்பைத்தானே இரட்டித்துக்கொண்டாற் போல், ஆழ்வாரைத்தனதடிக் கண்புனைந்தே "மஹாவிஷ்ணு" ஆவான், என்ற மறைப்பொருள் செப்பொருளாம்படி அப்பெரு மையே பின்னு மிரட்டித்துப் பரந்தோங்குவதென்ற, ரக்ஷகவ்யாபக தத்து வத்திட்பத்தை ஈண்டு ஆழ்வார் விளக்கியருளியபடி) என்றும், "தமியனேன் பெரிய அப்பனே" என்றும், தமிழ் வேதம் ஓதியரு ளிற்று. இத் திறத்தத்துவம் இரட்டித்துப் பெருத்த பான்மையை "ஸ்ரீவால்மீகி பகவான், முதலாழ்வார்கள், தொடக்கமானர், உண்டாயிருக்க, என்பக்கலிலே விசேஷ கடாக்ஷம் பண்ணி மிகச்

சிறக்கும்படி தந்த, பூர்ணமாகத்தந்த" என்றும், "இவரைப்பெற்ற ப்ரீதியாலே, வ்யாப்தியும் புதுக்கணித்தது" என்றும், தமத முதத் திருவாக்கால் நம்பிள்ளை விளக்கியருளியுள்ளார். சடகோபதத்துவம் நித்யஸூரிகட்கும் தலையாய ஒன்றும என்றதை "விண்ணுளாரிலும் சீரியர்" என்றும், "எனக்கார் பிறர் நாயகரே" என்றும், "அந்த மில்பேரின்பத்தடிய ரோடிருந்தமை" என்றும், தமிழ் மறை பின்னு மோதிற்று. "நித்யஸூரிகளும், மற்றுமுள்ள ஸகலாத்மாக்களும் ஒருதட்டும், நான் ஒருதட்டுமாம்படி, என்பக்கலிலே விசேஷ கடாக்ஷம் பண்ணியபடி" என்று நம்பிள்ளை இத்தத்துவத்தின் தனிப்பெருமையை விளக்கியருளினர். அவ்வுலகே திகழும் அப் பன் பொற்பாதுகமே ஆழ்வார் என்றதை "வடிவுடைவானோர் தலை வனே என்றும், வண் திருவரங்கனே என்றும் அடியடையாதாள் போல் இவளணுகியடைந்தனள், முகில் வண்ணனடியே" என்று மெய்த்தருளியபடி. "ஆப்ரணகாத்ஸர்வ ஏவஸுவர்ண:" என்ற உப நிஷத்துக்கு 'ராமபாதௌ உபஸ்ப்ருசந்" "ஆர்ய பாதௌ இமௌம தௌ" "பாதுகே ஹேம பூஷிதே" என்ற இராமாயணம் விரிவாய் நின்றது. இத்தத்துவத்தை "ஆணிப்பொன்னே" என்றும், "ஆணி செம்பொன் மேனி எந்தாய்......பேணிவானோர் காணமாட்டாப் பீடுடையப்பனையே" என்றும், அப்பரஞ்சுடர் தன் நெஞ்சொன் றுலேயே காணவல்லது என்றதை "என் நெஞ்சினுல் நோக்கிக் காணீரே" என்றும் அருளிச்செய்யப்பட்டது. ஹேமபூஷிதே என்று வான்மீகி உபப்ருமஹணம் செய்தது "யஏஷோந்த ராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே ஹிரண்யச் மச்ரு: ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வஏவஸுவர்ண:" என்ற உபநிஷத்துக்கே என்றும், அடிநிலையானபாதுகம் ஸுவர்ணமா யிருத்தலே, அடி தொடக்கமாய் பரன் "ஹிரண்மய:" "ஸர்வஏ வஸுவர்ண:" என்று விளங்குவதற்கு அடிபென்றும், "காந்த்யா பரம் புருஷம் ஆப்ரணகாத்ஸு வர்ணம் கர்த்தும், க்ஷமாத்வமஸி காஞ்சந பாதரக்ஷே" என்ற பாதுகாஸஹஸ்ரம் நன்கு விளக்கும். "செம்பொன் மேனிஎந்தாய்" என்றபாசுரத்துக்கு இவ்வுபநிஷத்தே விஷயம் என்றதை பாதுகாஸஹஸ்ரம் கொண்டு தெளிக. இவ்வுப நிடத வாக்கிய மெய்ப்பொருள் கண்டவாறே வகுளபூஷண பாஸ்கர தத்துவமும் தேறியதாயிற்று. இதை ஆழ்வார் தாமே "கண்கள்

சிவந்து பெரியவாய்...... ஒருவன் அடியேனுள்ளத்துள்ளானே'' என்றும், "தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்தந்த பேருத விக்கைம்மாறு தோள்களை ஆரத்தழுவி என்னுயிரை அறவிலை செய்தனன் சோதீ! தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்! துணை மலர்க்கண்களாயிரத்தாய்! தாள்களாயிரத்தாய்! தமியனேன் பெரிய அப்பனே,'' என்றும் அருளியுள்ளார். பரன் தன்திருப் பாது கவயத்தன் என்றதையே "தமியனேன்'' என்றருளிச்செய் தார் "புருஷ:'' என்ற சாந்தோக்கியமும், "புருஷம் மஹாந்தம்'' என்ற புருஷஸூக்தமும் "பெரிய அப்பன்'' என்று தமிழ்மறையா யிற்று. "த்ஸ்யதர்மக்ருதாதேசாவயம்" "பரதாஞ்ஞாம் புரஸ்க் ருத்ய" என்ற இராமாயணக்கருத்து "தமியனேன்'' என்றதால் விளக்கப்பட்டது. "தஸ்யவயம்" என்றது இராமாயணம். "தமிய னேன்'' என்றது திருவாய் மொழி.

இது காறும் ஆதிபாம்சோதிக்கேஆராதகாதல் என்னும் கடலாயும், அடியார்க்கு இன்பம் என்னும் வீடாயும், விளங்கும் அரிய ஓர் தத்துவமாம் "குருகூர்ச் சடகோபன்'' என்றது விளக்கப் பட்டது. இனி உலகு காக்கும் தருமத்திருக்தேவே ஸ்ரீ சட கோபன் என்றது விளக்கப்படும்.

கொள்ளுமெண்குண மோங்கு மறைத்தலைத்
துள்ளுவல்லி மதிப்புயர் மாறனர்
உள்ளி உள்ளி உணர்ந்தெழு போதமாய்
அள்ளி அள்ளி அளித்தருள் வள்ளலார். 1

உந்துகந்த முமிழ்ந் தெழு மொண்தமிழ்
தந்து தாமறைத்தாமுடி தாங்குவார்
அந்தரங்கரரிக்கவராதியார்
எந்தை யெம்மிடர் யாவையும் பாற்றுவார். 2.

படமெடுத்தாடித்தீண்டும் சடமெனும் கவடமொன்றை
உடன் கிழித்தெழுந்து தூய்ய வாய்மொழி ஒலித்துச்சொல்லின்
முடிகளாயிரமும் கண்ணும் தோகை கொள்கேகமாறன்
நடனமேகண்டு கொண்டல் நம்பியும் கண்ணனுனன். 3.

வரமெலாம் தந்து மூர்த்தி வருகவென்றழைத்துகந்து
காமதுதந்து கண்ணும் கருத்துமாய்க்காத்து வாழ்த்தும்
பிரமநூற்சிர முலாவு பிரம்மாயிலகு மாறப்
பாமனர் கமலபாதபோத மீதோதினேமே. 4.

பத்திராசிரியர்.

---

# திருவாய்மொழி அநுபவம்.

(முன் தொடர்ச்சி)

"உயர்வற" என்பதற்கு "தன்னில் மிக்கதில்லாமல் நிரதிசயமான" என்ற பொருள் உள்ளதென்பதை "அநவதிகாதிசய" என்று ஸ்ரீ ஆளவந்தாரும், "நிரதிசயதசாசிரஸ்கதயா அப்யாஸம் செய்யப்படும் ஆநந்தத்தையுடையதால்" என்று எம்பெருமானாரும் விளக்கினார்கள். 'ஆநந்தமய' ஸூத்ரத்தில் "அப்யாஸாத்" என்கிற ஹேதுவிற்கு "ஒரேசப்தத்தைத் திரும்பவும், திரும்பவும், பேசுகிறது" என்று மட்டும் மற்ற பாஷ்யகாரர்களால் பொருள் கூறப்பட்டது. "நூறு நூறாகப் பெருக்கிக்கொண்டேபோய், தனக்கு மேற்பட்டதில்லாதபடி, வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத எல்லையற்ற ஆநந்தத்தன்மையை உடையது" என்பது அந்த ஸூத்ரத்தில் ஸூத்ரகாரருக்குத் திருவுள்ளமான ஹேது என்பதை இப்பாசுரத்தின் முதலடி எம்பெருமானாருக்கு விளக்கிற்று என்பது திண்ணம். எம்பெருமானார் திருவுள்ளத்தை நூல்போல் அநுஸரித்த பிள்ளானும் "தேபே சதம்" என்று "நிரதிசயதசாசிரஸ்கமான வப்யஸ்யமானாயிருந்த.....இந்த ஆநந்தாதி கல்யாண குணங்களையுடையன்" என்று ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தியை இதற்குப் பொருளாகப்பணித்து ஆறாயிர நூலைத் தொடங்கினார் காரண விஷயமான ஆநந்தமய வாக்யத்தைத்தமதாநந்தக்கடலான உரை நூலுக்குத் தொடக்கமாக்கினார். ப்ரஹ்மம் எல்லையற்ற ஆநந்தம் என்பதைக் காட்டுகையில் வேதம் நூறு நூறாக மேன்மேலும் பெருக்கி ப்ரஹ்மத்தின் ஆநந்தம் கோடிக்கணக்கான ப்ரஹ்மாக்களின் ஆநந்தத்திற்கும் நூறு பங்கு பெரிதென்று, அதனிலும் பெரிதென்பதைக்காட்டி, உண்மையில் கணக்கிலடங்காததென்று

மேலே முடிவாக ஓதிற்று. இப்படி ஓதியவிடம் ஆநந்த மீமாம்ஸை செய்வதாகத் தொடங்கிப் பேசுமிடமாகையால் ஆழ்வார் அதையே தம்முடைய ஆநந்த மீமாம்ஸைக்கும் தொடக்கமாகக் கொண்டார். அத்தொடக்கத்தைக் கொண்டே ஜகத்காரணம் என்னும் லக்ஷணத்தையும் முதலிலேயே சேர்த்துக்கொண்டார். "அப்யாஸம்" என்பது "பெருக்குதல்" என்பதையும் சொல்லும் என்று காட்டியருளினர்.

"உயர்வற" என்பதற்கு 'கஷ்டப்பட்டு ஸம்பாதிக்காமல் ஸ்வ "பாவமாகவேயுள்ள" என்பதும் பொருள் என்பதை ஸ்ரீ ஆளவந்தார் ஸ்வாபாவிகாநவதிகாதிசய" என்று காட்டியருளியதை ஈடு முதலிய க்ரந்தங்கள் விளக்கியருளின. இரண்டு பொருள்களும் ஆழ்வாருக்குத்திருவுள்ளமே. "நலம்" என்னும் ஆநந்தம் முதலிய கல்யாண குணங்கள் "இயற்கையானவை" என்றதால் அக்குணங்கள் கல்பிக்கப்பட்டனவல்ல என்பது ஸ்பஷ்டம். ப்ரஹ்மம் உலகத்திற்குக் காரணம் என்று பாடும் ச்ருதி "ப்ரஹ்மத்தின் எல்லையற்ற சக்தியும், ஞான பலக்ரியைகளும், ஸ்வாபாவிகம், என்று அறுதியிட்டது. ப்ரஹ்மத்தின் குணங்கள் ஸ்வாபாவிகம் என்றச் ருதியை ஆழ்வார், "உயர்வற" என்று முதற் பதத்திலேயே காட்டும் அழகை என்னென்று சொல்லுவது. இதைக்கொண்டும் குணங்கள் கல்பிதங்கள் என்னும் நிர்க்குணக் கக்ஷியை மிடற்றைப் பிடித்து விலக்குகிறார். ப்ரஹ்மத்தின் எல்லையற்ற ஆநந்தம் ஸ்வாபாவிகம் (இயற்கை) என்று முதலிலேயே அறுதியிடுவதில் மற்றோர் விசேஷமு முண்டு. முக்தர்களுக்கும் தன்னுடைய எல்லையற்ற ஆநந்தத்தில் அணுவளவும் குறையாத ஆநந்தத்தை அளிக்கும் வள்ளலாகும் ப்ரஹ்மம். எல்லையற்ற ஆநந்தம் என்பது முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் உள்ளதே. "எல்லையற்ற ஆநந்த முடையவன்" என்பது மட்டும் ஈச்வரனுக்கு பிறருக்கில்லாத தனிப்பட்ட லக்ஷணமாகாது. அப்படிப்பட்ட ஆநந்தம் அவனுக்குப் பிறர் கொடாமல் ஸ்வபாவமாயுள்ளது. மற்றெல்லோருக்கும் அவனருளால் அளிக்கப்படுவது என்னும் வேற்றுமையைக்காட்ட அவ்வாநந்தம் "அவனுக்குஸ்வாபாவிகம்" என்று முதலிலேயே பேசுகிறார். அடுத்தஅடியில் அவனருளால் அது பிறருக்குக்கிடைப்பதையும் பேசுகிறார்: இதை இந்தப்ரபந்தத்தின் முடிவுவாக்யத்திலும்

அழகாகக்காட்டியருளுகிறார். அவனுக்குள்ள "உயர்வறஉயர் நலம்" அவனருளால் ஞானம்பெற்றுப் பிறக்கும் முக்தருக்கும் வருகிற தென்பதை "பிறந்தாருயர்ந்தே" என்று முடிப்பதால், காட்டியருளும் அழகைக் கவனிக்கவேண்டும். உயர்வற உயர்நலமுடையவனாயிருப்பது, நம்மை அப்படியே ஞானத்தால் பிறப்பித்து உயரச்செய்யவே, தன் வீடு சேர்க்கவே, என்பதை விளக்குவது இந்நூலின் முக்கியக் கருத்து. இந்நலம் அவனுடைமையாயுள்ளதை நமக்கும் எள்ளளவேனும் குறைவில்லாமல் வழங்குகிறான் என்பதை நூலின் முடிவில் ஈற்றடியில் காட்டப்பட்டது. இந்நூலை ஓதி உணர்ந்து அப்யஸிப்பார்க்கு நூல் தொடக்கத்தில் ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்பட்ட அப்யஸ்யமாநதான "உயர்வற உயர்ந்த ஆநந்த உயர்வு" கிடைப்பது திண்ணம், எப்படித்தன்னுடைய நிரதிசயமான 'ஞாநாநந்த'ங்களை ஆழ்வாருக்கு அருளினர் என்று முதற் பாசுரத்தில் இரண்டாமடியில் கூறப்பட்டதோ, அப்படியே ஆழ்வாருக்குப்போலவே ஆழ்வாரநுபவ நூலில் ஆழ்வார்க்கும் அளிப்பது திண்ணம் என்பது நூல்முடிவில் உபதேசிக்கப்பட்டது. "உயர்ந்து" என்பதும், "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்து" என்பதையெல்லாம் உபலக்ஷண முறையாகச் சேர்த்துக்காட்டும். ப்ரஹ்மாநந்தம் நம்மைச்சூழவேணும், சூழ்ந்து எல்லையற்று அகலவேணும், அகலத்துடன் கீழே அகாதமாய் ஆழமாகவேணும். மேலும் எல்லையற்று உயரவேணும். "கொள்ளமாளாவின்ப வெள்ளம் கோதில தந்திடும் என்வள்ளலேயோ" என்பதை நினைக்கவேணும். ஸூத்ரகாரரும் எல்லையற்ற ஆநந்தஸ்வரூபஸ்வபாவங்களை முதலில் லக்ஷண ஸூத்ரத்தில் ஸூசநமாகவும், ஸமந்வயாதி கரணத்திலும், ஆநந்தமயாதி கரணத்திலும், தெளிவாகவும், காட்டி, இவ்வெல்லையற்ற ஆநந்தம் முழுவதையும் தனக்கு ஸமமாக முக்தர்களுக்கு அளிக்கிறான், என்பதைத்தமது நூலின் முடிவில் "போகம் முழுவதும் ப்ரஹ்மத்தோடு ஸமாநமாக உண்டு" என்பதால் காட்டினர். "போக மாத்ரத்தில்ஸாம்யம்" என்ற ஸூத்ரத்தில் "மாத்ரம்" என்பதற்கு "முழுவதும்" என்ற பொருளும் ஸூத்ரகாரருக்குத் திருவுள்ளம். "மட்டிலும்" "முழுதும்" என்ற இரண்டு பொருளும் அப்பதத்திற்கு உண்டு.

ஏ. வி. கோபாலாசாரியார்.

# ஓர் பெரியார் பிரிவு.

நம் தமிழ்நாட்டுக்கு ஓர் தனித்தீபமாயும், நம் சங்க மகாவித்வானாயும் விளங்கிய பண்டிதபூஷணம் கவிஸிம்ஹம் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தானவித்வான் தில்லைம்பூர் ஸ்ரீ உபவே சக்ரவர்த்தி ஆசார்ய (ஸ்ரீராமபத்ர ஆசார்ய) ஸ்வாமி ஆடிமாதம் 10உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ அழகியசிங்கர் திருவருளால் திருநாட்டை அலங்கரித்தார். அலங்கரிக்கப்பட்டது அவ்வுலகெனினும், இவ்வுலகுக்கு இவரது பிரிவு ஆற்றவொண்ணாததாயிற்று. அறநெறிகாத்து, அருமறைப் பொருள் விரித்து, அரியடிக்கே அருந்தொண்டாற்றும் திருத்தகவுடைய இத்திறப்பெரியோர்கள் அன்னோன்திருவருளால் இவ்வுலகில் சிற்சில காலத்தே தோன்றித் திகழ்தலான் இவர்போல்வாரை நம் நாடு இழக்கப் பொறுக்காதவொன்றாயிற்று ஆயிற்றாயினும் ஆக்கை என்றது ஓர் ஞான்று துறக்கப்படவேண்டியதொன்றாதலான் துறந்த ஆக்கையை நினைந்து மனம்வருந்தாது நிலைநின்ற அன்னார் அன்பார்ந்த பான்மையையும் அறமோர்ந்த தகவையும் நன்குள்ளிக் குணக்கடலாடுவதே மறையோர் மரபாகும். இருமாமறைமுடிப் பொருளையும் தலைத்தலைச்சிறப்ப எம்பால் அளித்திட்ட இவ்வள்ளலார் நற்குணக் கடலாடும் கடப்பாடு எமக்குத் தலைத்தலைச்சிறப்ப உற்ற ஒன்றாதலான் அஃதைசண்டைக்குச் சிறிதே விண்ணப்பித்துக் கொள்ள முயலாநின்றோம்.

இப்பெரியார் கருவிலே திருவுடையராய், தமது நல்லாசிரியராகிய ஸ்ரீ அழகியசிங்கர் திருவருளுக்கு உற்றஓரிலக்காகி, அன்னார்க்கு எஞ்ஞான்றும் நல்மாணாக்கராயிருத்தலே தமது இயல்பு என்றும் தமது வாழ்வு என்றும், தாம் பெறும் பெருப்பேறு என்றும், தெளிந்து, அப்பெரும் பேற்றையே ஆண்டுமடைவிக்கும் நல்லதோரறநெறிக்கண் பொருந்திப்பொலியா நின்றார். தெள்ளிய சிங்கப்பிரான் செங்கோன்மை வடிவாயே நெடிதூழிவளர்ந்து விளங்கிப் போரும் எம்மனோரிறையாகிய ஸ்ரீ அழகியசிங்கர் பொன்னடிகடக்க இயலாமையே இவரது சிறந்த பேராண்மையாம். "குரும்ப்ரகாசயேத் தீமாந்" என்ற அந்நல்ல தோரறமே இவர் வடிவாய்த்திகழ்ந்து நின்றமையே இவரது ஒப்பற்ற கீர்த்திமையாம் பானை நல்லாசிரியனையே சண்டடையும் பெரும்பேறுபெற்ற ஸச்சிஷ்ய சிகாமணிகளுள்

இவர் தலைசிறந்த ஒரொருவராவார். இத்தகைய இம்மாதவத்தோர் செந்நாவிடையே இருமாமறைகளும் ஒன்றிச்செழித்து வளராநின்றன. வ்யாகரணவன்மையும், தருக்கச்செறிவும், மீமாஞ்சைத்தேற்சியும், இருகலைப்புலமையும், சோதிடஅறிவும், மந்திரஉணர்வும்; அறநூல்தெளிவும், மறைமுடித்திருவும், இவர்திருவுள்ளத்து ஒருங்கிக்குலாவாநின்றன. இவரமுதத்திருவாக்கின் வன்மையும் தூய்மையும் ஒப்பரியது. தண்ணியராகிய எம்போல்வாரிடத்தும், அன்புமிகுந்து கலந்துகொள்ளும் எளிமையே அத்திற இவரது பெருமையைநன்கே வலியுறுத்தியது. கைம்மாறுவேண்டாகடப்பாடு என்றது இவரிடத்து நன்கேபொருளுற்றது. தமதாசிரியர் ஆணைகாத்தே அண்ணவிருப்பிடங்களாய வேங்கடம் தொடங்கி மாலிருஞ்சோலை யூடைவாக த்தமது திருநாமத்துக் கேற்பச்சிறிதுமிடுக்கணுக்காது, கைம்மாறு கருதாது ஓர் தனிவீரராய் எம்பெருமானுர் தரிசனவெற்றிக்கொடியை நிலைநாட்டிக்கொண்டே மேன்மேலும் வீறுபெருந்து வளர்ந்துவந்த இப்பெருந்தகையாளர், மிகுந்துபோந்த வைகுந்தம் உடன் புகுந்தது பெரிதும்பொருத்தமுடைத்தேயாம். நல்மாணுக்கரெனும் சொல்லுக்கு இலக்காய்த்திகழும் இந்நல்லார் வரவை ஆண்டுற்றவேதம்வல்லார்கள் "நமது வரவு நல்வரவாகுக" என்றே வாழ்த்தப்பெறுதற் குரியராகிய இப்பெரியார்க்கு "பொலிக, பொலிக" என்று சொற்பணி செய்வதல்லால் மற்றுயாதுயாம் செல்ல்யவல்லோம்? நல்லுணர்வும், நல்லறமும், நல்லன்பும், இவரிடத்து நன்கு வாழ்ந்து நலம் திகழ்ந்தன என்றதைக் கண்களாரக்கண்டு களித்துள்ளோம். இத்திற நற்குணக்கடலின் பிரிவாற்ருமையை இவரது திருத்தம்பியாராகிய ஸ்ரீ உபவே வேங்கடாசார்ய ஸ்வாமிக்கு விண்ணப்பம் செய்து கொள்கிறோம்.

பத்திராசிரியர்.

---

## பாரோர்பாசகியப் பார்ப்பனச்சிட்டர்.

அமலன் உகந்த நந்திரு நாட்டில் அவ்வப்போது உத்தம புருஷர்கள் தோன்றி மறைவர் ஒருவன் வாழ்நாட்களில் ஒரு மஹானது சம காலத்தனுக இருக்கப் பெறில் அதுவும் ஒரு பாக்கி

யமே. அவரும் தன்னாட்டிலிருந்தால் அது சிறந்ததாகும். அதன்றி அவருடன் இணங்கியிருக்கப் பெறில் அது கன்னலும் அமுது மொக்கும் என்ப. மஹான்கள் ஜீவிய காலத்திலேயே அவர்களைப் பாராட்டுதல் எந்த நாட்டினும் விசேஷமாக இருந்ததில்லை.

தமிழ்நாடு செய்த அருந்தவப் பயனால் கங்கையிற் புனிதமாய காவிரிபாயப் பெற்ற சோழவள நாட்டில் திருக்குடந்தைக் கருகிலுள்ள தில்லையம்பூர் அக்ரஹாரத்தில் முடும்பிக்குலம் விளங்க முகுந்தனருளால் பிறந்து, அதிபால்யத்திலேயே உபய வேதாந்தங்களையுங் கசடறக்கற்று, பொன்மலர் நாற்ற முடைத்து என்றபடி தாங்கற்றதைப் பிறர்க்கு அறிய விளக்கும் பெற்றியராய்த் திகழ்ந்து, ஞானம், அநுட்டானம், வைராக்கியம் என்ற மூவகை நிதியும் முற்றியவராய் நின்று தாமின்புறுவது உலகின் புறக்கண்டு காமுறுங் கல்விமானாய் மன்னி, ஆசார்ய பக்தி யிற்றிலே சிறந்தவராய் அனைவரது அபிமானத்தையும் அடைந்து, பகவத் பாகவத கைங்கர்ய துரந்தரராய் வீற்றிருந்து, சென்ற விடமெல்லாஞ்சீரும் சிறப்பும் பெற்று, ஸாதுஸங்கத்தில் அக்ரகண்யராய்ப் போற்றப் பட்டு, பண்டித கோஷ்டியில் பூஷணமாய் அவை மகிழ அநுசரித்து நின்று, அண்டினவருக்கு ஆறுதல் அளித்துப் பெரும்பேறு பெற்றவர் ஸ்ரீ உபவே ராமபத்ர சக்கரவர்த்தியாசாரிய ஸ்வாமி.

இவரது சொல்வன்மையைக் கொண்டாடாதார் ஒருவருமில்லையென்னலாம். சாத்விகப் புராணப்ரவசனத்தில் தனக்குவமையில்லாது திகழ்ந்த தனி நாவர். பகவத் விஷயத்திலுந் தனக்கொப்பாரும் மிக்காருமில்லை என்று நன்கு பிறர் மதிக்கச் செய்த பேராசிரியர். ஆங்காங்கு ஸ்ரீ பாஷ்யாதி காரிகளாகத்தக் கோரை அளித்த பெருந்தகையாளர்.

ஆத்ம குணபரி பூர்த்தியுள்ள மகாநுபாவர்; உற்றது கொண்டு வக்கும் உத்தமர்; ஊராருக்குக் குங்குருமமே செய்து உயர்ந்தவர்; எக்காலத்தும் உண்மையே மொழியு நீரர்; இன்சொல்லர்; சீரிய வாழ்க்கையர்; பிறர் இகழ்ந்து கூறிய காலத்தும் நடுவு நிலைமையோடு நிற்கும் நன்னெஞ்சர்; அகங்காரமமகாரம் அற்றவர்; அகோபிலத்தானத்து ஆத்தான வித்துவானாய்த் திகழ்ந்தவர்; ஆசையை அறுத்தவர்; இராகவனைப் போன்று தன்னிளையவரிடம் ஆரா காதலுடையவர்; அன்னையிடம் தேவதா

விசுவாசம் உடையவர்; மன்னுயிரைத்தன்னுயிர் போல்எண்ணியதக வாளர்; சீடர்க்கருள்புரியும் சீலர்; அல்லையும் பகலும் காலக்ஷேபமே பொழியும் அண்ணல்; ஆழ்வாரிடம் ஆராத பக்தியுடையவர்; ஆசார்யத்வம் வகிக்கக்கூடிய அபாரயோக்யதையுள்ள வராயிருந்தும் சிஷ்யனுயிருப்பதையே அவலம்பித்து நின்றொழுகிய நிஷ்டர்; ஆசார்யகடாக்ஷம் நிரம்பவும் பெற்றவர்; காட்சிக்கு எளியர்; கேட்டகேள்விகட்டு இங்கிடந்தாமதியாது பதிலுரைக்கும் ப்ராண்டித்ய மிகுந்தவர்; எம்முறை கேட்பினும் வெறுப்படையாது ஐயங்களைத் தெளிவுறத் தீர்த்துவைக்கும் விவேகி. அயலாரையும் அன்புடன் ஏற்கும் அருங்குண முடையவர். இவண் கூறிய ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சமயம் நேரில் கண்டு அநுபவித்தது: அச்சந்தர்ப்பங்களையும் விரிக்கிற் பெருகும் என்று அஞ்சி இங்ஙனே நிறுத்தப்படுகின்றது.

சநாதன தர்மப்ரசாரத்தில் மிக ஊக்க முடையவர், செந்தமிழைப்பரவச் செய்வதில் மிக ஆர்வமுள்ளவர். ஆழ்வார்கள் அருளிச்செயல்களை அனைவரும் கற்றுஉய்ய வேண்டுமெனபது அவரது பேரவா.

காசில் கொற்றத்திராமன் கதையைக் காசினியோர் நன்கு அறிந்து உய்யும் வண்ணம் சென்ற இடங்களிலெல்லாம் ஸ்ரீராம கதாப்ரவாகத்தை அளித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீராமபட்டாபிஷேகத்தன்று ஒருவர் கேட்க வந்தாலும் இராமர்பண சாராம்சம் அவர் நன்கு அறியும் வகையுண்டு.

ஜோதிடம் மாந்த்ரிகம் முதலியவற்றிலும் ஸ்வாமிக்கு விசேடபரிசயம் உண்டு. இதனை நன்கு அடியேன் அநுபவித்திருக்கிறேன்.

பாரோர் பாக்கியப்பார்ப்பனச் சிட்டரான இப்பெரியாரைச் செவ்வனே போற்றல் சீரியர் கடன். இவரது ஞாபகார்த்தமாக வருடந்தோறும் குறைந்தது ஒருவாரமாயினும் ஒரு வித்வத் ஸதஸ்ஸு கூட்டி பல பண்டிதர்களைக் கொண்டு விசிஷ்டாத்வைத சித்தாந்தப்ரவசனம் செய்வது சாத்தியமாகவும் அவரது ஆன்மாவுக்கு உகந்ததாயுமிருக்கும். அத்துடன் ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீபகவத் விஷயம் இத்யாதிகளில் ஒரு பரீக்ஷை ஏற்பாடு செய்து அதில் முதல்தரமாகத் தேறுமவர்கட்கு தகுந்த பரிசு கொடுக்கவேண்டிய

ஏற்பாடு செய்யில் அம்மகான் உழைத்துவந்த காரியம்மட்டின்றி நடந்துகொண்டேவரும். இதனை தார்மிகர்கள் கவனித்து வேண்டிய ஏற்பாடு செய்வாராக.

நல்லார் சொற் கேட்பதுவும் நன்று என்றபடி அப்பெருந் தகையார் உபதேசித்த பொன் மொழிகளின்படி நடப்போமானல் இகபரலோக இன்பங்கள் எளிதில் எய்தும். எல்லாம் வல்ல இறைவனின் இன்னருள் சுரக்கும். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

---

## அடியேன் அநுபவித்த வண்ணம்.

ஸ்ரீ உபவே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசாரிய ஸ்வாமிகள் சென்ற இரண்டு வருடங்களுக்கு முன் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ பகவத்விஷய காலக்ஷேபதினத் தன்று அடியேன் அங்கு விடை கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் ஸ்வாமியை முதன் முதல் அடியேன் சேவித்தது. என்ன கம்பீரமாய் என்ன லாகவத்துடன் வடமொழிப் பயிற்சி இல்லாதாரும் உணருமாறு செந்தமிழில் உபந்யசித்தார்? ஆழ்வாரது திருவுள்ளத்தை முற்றும் உள்ளபடி அறிந்து கூறுவது போலவே அடியேனுக்குத் தோன்றியது. அடியேன் மனம் உருகி விட்டது. அடிக்கடி காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்து அக மகிழ்ந்தேன். திடீரென ஸ்வாமி திருநாடலங்கரித்த செய்தி கேட்டு அடியேன் மனம் உடைந்தது. இன்னது செய்வதென்று தோன்றவில்லை. ஸ்வாமியின் ஞானம், அநுட்டானங்கள், சொல்வன்மை இவ்வளவென்று வரையறுத்துக் கூற முடிந்ததல்ல திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்து வித்துவானுய்த் திகழ்ந்து ஆற்றிய தொண்டுகள் பல. சங்கத்தார் துரதிருஷ்டத்தால் இன்னும் பல ஆண்டுகள் அவர்கள் இங்குத் தங்கி விசேஷ நன்மைகள் செய்ய முடியாததாக ஆய்விட்டது. எனினும் அவர்க்கு ஆட்செய்யவே அங்குச் சென்றார் போலும் அவர் ஆன்மா சாந்தி அடைக, அவர் மொழிப்படி நாம் நடப்போமாக. அவரது திருத்தம்பியாரும் சகல சாஸ்திர பாரங்கதர் என்று கேள்வி. அவரையே இச்சங்க வித்வானுகத் தேர்ந்தெடுக்குமாறு யான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எவ்வாற்றானும் கைங்கரியம் செய்வதே நம்மவர் முதற்கடமை யல்லவா? மேலும் பரமபதித்த ஸ்வாமியின் ஞாபகார்த்தமாக அடிக் கடி நாம் உபந்யாசங்கள் நடத்திவரவேணு மென்பது சிற்றறி வுடைய அடியேன் செய்யும் விண்ணப்பம்.

திருவொற்றியூர். ஸி. ய. ம். ஷண்முகசுந்தர முதலியார்.

---

## திருப்பாவை விளக்கும் திருப்பாவலர்.

அடியேன் பாக்கிய விசேடத்தால் அடிக்கடி தில்லையம்பூர் ஸ்வாமிகளின் ஸ்ரீமத் ராமாயண உபந்யாசங்கள் கேட்டு அநுப வித்திருக்கிறேன். ரசம் இவ்வளவென்று எடுத்துரைக்க இயலாது, அவர் ஒரு அவதார புருடர் என்றே பல கால் எண்ணிய துண்டு.

திருப்பாவை காலக்ஷேபம் அநேகரிடம் கேட்டிருக்கிறேன். இந்த ஸ்வாமி மாதிரி வேறெவரும் சொன்னதில்லை. ஒரு சமயம் அடியேன் சென்ற பொழுது 'அங்கண்மா ஞாலம்' என்ற பாசுரம் நடந்து கொண்டிருந்தது. அதனுடைய அர்த்த புஷ்டி யும், ஸ்பாபதேச வியாக்கியானமும் இப்பொழுதுதான் சொல்வது போல் இருக்கிறது. ஸ்வாமிக்கு நன்னூல், தொல்காப்பியம் இவற்றி லும் விசேஷ பரிசயம் உண்டு. அற்புதமாக உபந்யசிப்பர். பெரிய வாச்சான் பிள்ளை முதலிய வ்யாக் யாதாக்களின் வியாக்கியானங் களை வெகு அழகாகச் சொல்வர். திருப்பாவை சுரங்கம், அவர் கூறுவது அற்புதம், கால வித்தியாசம் திடீரென அவர்கள் கால மாகி விட்டார்கள். இத்துக்கம் நம்மை மிகவும் பாதிக்கிறது. என்செய்வோம்? அவர் கூறிய வார்த்தை கொண்டு சாந்தி யடை வோமாக.

யஸ். குமாரசாமி செட்டியார், ஜார்ஜ்டவுன்.

---

## திவ்யப்பரபந்த நிபுணரான தில்லையம்பூர் ஸ்வாமி.

காலஞ்சென்ற ஸ்ரீ உபவே தில்லையம்பூர் ஸ்வாமி திருவல்லிக் கேணியில் பரம கிருபையுடன் சாதித்து வந்த காலக்ஷேப கோஷ்டி யில் யான் அந்வயித்து நலம் பெற்றேன். ஆழ்வார் திவ்ய சூக்தி களை அவர் போன்று அழகாக விவரணம் செய்ய எவராலுமாகாது. ஒரு தரம் கேட்டாலே மனதில் நன்குபதியும்படி சொல்வதால் நன்கு அமையும். ராமாயணம் ரசங்களிலும் விசேஷமாக ஆழ்

வார் அருளிச் செயல்களையும் கலந்து அநுஸந்தித்து விளக்கு கையில் கேட்பதற்கு மித வினிமையாக இருக்கும். மார்கழிமாதம் வந்தால் திருப்பாவை காலக்ஷேபந்தவராது நடக்கும். ஒவ்வொரு பாசுரத்தையும் மிக உருக்கமாக சேவித்து அர்த்த புஷ்டியுடன் சொல்வது மிக ஆனந்தமாக யிருக்கும். சங்கராந்தி தினத்தன்று ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம் அதிக அற்புதமாகப் பிரசங்கித்து அனைவரும் அகமகிழுமாறு செய்வர். ஆழ்வாரது அபாராவதாரமோ என்னலாம்படி அதிரசமாக விஷயங்களை எடுத்துரைப்பர். மந்த்ராக்ஷத்தை அளிக்கும்போது அடியேன் போல்வார் யோக க்ஷேமங்களை மிக வன்புடன் விசாரித்து அநுக்ரஹிப்பர். ஆழ்வார்கள் செய்ய தமிழ்மாலைகளை நாம் அநுதினமும் தெளிய வோதி அவற்றை நாடெங்கும் நன்கு பரவச் செய்தலே நாம் அவருக்குச செய்யும் கைம்மாறாகும். ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சுந்தர சேகரன் இராயப்பேட்டை.

---

## பன்மணித்திரள்.

**ஆலமர்வித்து:—**

ஆலமரத்தின் பழம் ஜடப்பொருளாகியப்ரக்ருதிக்கும், அதிலிருக்கிற விதை ஜீவாத்மாவிற்கும், அந்த விதைக்குள்ளிருக்கும் நுண்ணிய விதை பரமாத்மாவிற்கும் உதாரணமாகக் கொள்க ஸூக்ஷ்மமான விதையில் மிகப்பெரிய விருக்ஷமடங்கியிருப்பது போல பரமாத்மா வினிடத்தில் எல்லாமடங்கியிருக்கின்றன. ப்ரக்ருதி, ஆத்மா, பரமாத்மா வென்ற மூன்று தத்வங்களைக் காட்டிலும் பிறிதோர் பொருளில்லை யென்பதும், இந்த மூன்று வஸ்துக்களுள், பரமாத்மாவே மற்ற இரண்டு பொருளிற்கும் ஆதாரமாக விருப்பனென்பதும் விளங்கு கின்றன. 'நீ அதுவாகினாய்' என்பதற்குச் சுவேதகேதுவின் ஆத்மசரீர விசிஷ்ட பரமாத்மாவென்றே பொருள் கொள்ளத்தக்கது.

**ரஜதன்குற்றம் பொறுத்தது:—**

ஒரு நாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரி வட்டங்களை அழகிதாக வாட்டிக் கொண்டு எம்பெருமானுருக்குக் காட்ட

போரத்ருப்தராய் அவனைப் பெருமாள் திருவடிகளிலே கைபிடித்துக் கொண்டு புக்கு 'நாயன்றே இவன் திருவரைக்கிடாம்படி வாட்டின படி திருக்கண்சாத்தியருளவேணும், என்றிவற்றைக் காட்டியருளக் கண்டு கந்தருளி உடையவரை அருளப்பாடிட்டருளி, 'இவனுக்காக ரஜதன் நம்திறத்திற் செய்தகுற்றம் பொறுத்தோம்' என்று திருவுள்ள மாயருளினார். (திருப்பரிவட்டம்-ஆடை; அழகிதாக வாட்டி—அழகாக வெளுத்து; போரத்ருப்தராய்—மிகவுமன மகிழ்ச்சியுடையராய்; நாயன்றே—நாயல்லவா; திருக்கண்சாத்தியருளவேணும்—கடாக்ஷித்தருள வேணும்; இவற்றைக் காட்ட—ஆடைகளைக்காண்பிக்க; ரஜதன்—வண்ணான்,

## 'கடற்கரை வெளியை நினைத்திரும்':—

வீரசிகாமணிப்பல்லவராயன் என்னும் அரசன் பட்டரைத் தெண்டனிட்டு 'ஸ்வாமி! அடியேனுக்கு ராஜ்ய காரியங்கள் மிகவும் இருத்தலால் பகவத் விஷயம் கேட்பதற்குச் சிறிதும் அவகா-மில்லை. ஆதலால் அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தத்தை அருளிச் செய்யவேணுமென்று வேண்டிக் கொண்டான், அப்பொழுது பட்டர் அவனை நோக்கிக் 'கடற்கரை வெளியை நினைத்திரும்'' என்று அருளிச்செய்தார். இது கேட்ட அரசன் அதன் கருத்தை அறியாது திகைத்து நின்றான். அது கணடு பட்டர் அவனை நோக்கி, கேளீர்! உவர்க்கடலின் கரையில் ஓரமிர்தக் கடல் போலச்சக்கரவர்த்தித்திருமகன் வானர சேனைகளுடன் எழுந்தருளியிருந்த போது, வானரர்கள் இராவணனது சேனாபலத்தால் ஸ்ரீராமபிரானுக்கு என்ன தீங்கு நேரிடுமோவென்று மிகவும் கவனமாகப் பாது காத்துக்கொண்டிருந்தனர். பின் நள்ளிரவில் அயர்ச்சியால் அவர்கள் செயலற்றுறங்கினர். இது கண்டபெருமாள் இளைய பெருமாளுடன் கையிற் கோதண்டத்தை ஏந்தி வானர சேனைகட்குத்தீங்கு சிறிதும் நேராமல் நடையாடுகின்ற மதில்போல் நாற்றிசையும் சுற்றி வந்து அவர்களைப்பாது காத்தருளினார். இவ்வாறு ரக்ஷித்தருளிய ஸ்ரீராமபிரானுடைய கையும் வில்லுமேதஞ்சமென்றிருக்கக்கடவீர் என்று கூறியருளினர்.

## மோறுள்ள தனையும் சோறேயோ:—

ஒருவன் நாழியரிசியைக் கொண்டு போய் ஒரு அம்மையாரிடம் கொடுத்து 'அம்மே! எனக்கிதனைச்சமைத்திட வேண்டும்', என்று கேட்டுக் கொண்டனன். அம்மையாரும் அதற்குடன் பட்டு அதனைச் சமைத்து உண்கலத்திலிட்டு உண்ணென்றனள். அவனும் பக்கத்சில் மோரை வைத்துச் சொண்டு வார்த்து அம்மையாரே! மோர் விஞ்சிற்று; சோறிடும் சோறிடும் என்று பலகாலும்

கேட்டனன். அம்மையாரும் அவனை நோக்கி நீ மோர் மிகுதியாகக் கொண்டு வந்திருக்கிறாய், நீ கொடுத்த நாழியரிசிக்குரிய சோறிடுவேனேயன்றி, மோருள்ளதனையுஞ் சோறிட வேண்டுமென்பதற்கியாதியைபுளது' என்றனள்.

பாரத்வாஜி.

## ஹாஸ்யத்துணுக்குகள்.

ஒருபிராஹ்மணன், பரமலுப்தனாயிருப்பானாய், வேறொரு பிராஹ்மணன் அவன் கிருஹத்திலே போஜனார்த்தமாகச் செல்ல, சிலரிருந்து 'அவனொருவனுக்கும் அசனமிடான்; லுப்தன்காண்' என்ன 'உங்கள் முன்பே அவனகத்திலே எப்படியுமுண்டுவருகிறேன்' என்று ஆர்த்தியைக் காட்டி 'இத்தனைப்ரசாதமுண்டாகிலும் ஜீவிக்கலாம்; என்ன, அவன் 'தன்னாலாவதில்லை, என்ன, இவனுமிறுகப்பிடிக்க, 'ஆனால் இலை இல்லை' என்ன, மடியில் இலை எடுத்துக்காட்டி, 'கொண்டுவந்தேன்' என்ன, 'கழுத்தறுக்கவருகிறவர் கத்தியும் கையிலே கொண்டு வாராரோ' என்று சாறசனமிட்டானாம்:—

(லுப்தன்—உலோபி; ஆர்த்தியைக் காட்டி—வறுமையை வெளிப்படுத்தி; சாறசனம்—கஞ்சியுணவு.)

* * *

'பண்டு' தலையிலே மயிரின்றிக்கேயிருப்பானொருவன் நெற்பரிமாறா நின்றானாய், அங்கே ஒருவன் சென்று, 'மயிரைப்பேணாதே நீர் தனியே நின்று பரிமாறா நின்றீர்' என்ன, ஏன்றான் நடந்தது! என்ன, ஒன்று மில்லை கண்டுபோக வந்தேன் 'என்ன' 'ஆகில் ஒரு கோட்டையைக் கொண்டு போகலாகாதோ என்று எடுத்துவிட, அவனதைக்கொண்டு வாராநிற்கச்செய்தே, எதிரே ஒருவன் வந்து, இதெங்கே பெற்றது?' என்ன, உன்றன்மொட்டைத்தலையன் தந்தான், என்றானாய் அவன் அதைச் சென்று அங்கே 'இன்னனும்மைவைது போகநின்றானீ!' என்ன 'அடா! என்னெல்லையுங் கொண்டு என்னையும் வைதுபோர்வதே, என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து 'என்றான்குழல்களலைபவலைய ஓடிவாராநின்றதி! என்ன 'ஒன்று மில்லை; இன்னமொரு கோட்டை கொண்டு போகச்சொல்ல வந்தேன் என்றான்.

விநோதன்.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்

**உப தலைவர்கள்....**

1. ஸ்ரீமான் வி நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane
and published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.